*6*

# தகுதியான வகையில் உங்களை அலங்கரித்துக்கொண்டு காருண்யமாயிருங்கள் (1 பேதுரு 3:1–7)

இந்தத் தலைமுறையின் பாலினங்களுக்கு இடையில் சமத்துவத்திற்கான தீவிரமான செயல் முனைப்புடன் கூடிய மேம்பாட்டுச் செயலில், பெண்கள் வெற்றி கொண்டவர்களாக இருக்கையில் அவர்கள் இழப்பவர்களாகின்றனர் என்பது எவ்வளவு வினோதமான முரண்பாடாக உள்ளது! பாலினங்கள் "சமான மாக" இருப்பதில்லை. பெண்கள் குழந்தைகளைப் பெற்றுக்கொள்கின்றனர் மற்றும் ஆண்கள் யுத்தத்திற்குச் செல்கின்றனர் என்பது எப்போதுமே உண்மை யாக இருந்துள்ளது. சமத்துவம் என்ற பெயரில் நாம் பெண்களை யுத்தத் திற்கு அனுப்பலாம், ஆனால் ஆண்கள் குழந்தைகளைப் பெற்றுக் கொள்ள மாட்டார்கள். இயல்பான மற்றும் சமூகரீதியான வேறுபாடுகள் எப்போதுமே ஆண்கள் அல்லது பெண்களுக்குச் சாதகமாகச் செயல்படுவதில்லை. உதாரண மாக, ஆண்கள், பெண்களைக் காட்டிலும் இளம் வயதிலேயே இறங்கின்றனர் என்பது உளவியல் ரீதியான அழுத்தமாக அல்லது உளவியல் ரீதியான பலவீன மாக உள்ளது. ஆண்கள் மற்றும் பெண்கள் மீது சமூகமும் இயற்கையும் மாறுபட்ட மற்றும் சமானமற்ற வகையில் சுமைகளைச் சுமத்துகிறது. இந்த சமானமற்ற தன்மைகளை, "பாலினங்களுக்கு இடையிலான யுத்தத்திற்கு" அடிப்படையாக்குதல் என்பது மதியீனமானதாகும்.

ஆண்கள் என்ற வகையில் ஆண்கள் சுமக்க வேண்டிய பாரங்களையோ அல்லது பெண்கள் என்ற வகையில் பெண்கள் சுமக்க வேண்டிய பாரங்களையோ, சட்டப்பூர்வமான அல்லது பொதுவான விழிப்புணர்வு எதுவும் குறைத்து விடாது. ஒவ்வொருவரும் மற்றவருடனான உறவின் முறை மற்றும் சுற்றிலுமுள்ள உலகத்துடனான உறவுமுறை ஆகியவற்றின் தொடர்பாகச் செய்ய வேண்டிய அவரவருக்குரிய பணிப்பங்கு உள்ளது. உணர்வுரீதியான மற்றும் உளவியல் ரீதியான வேறுபாடுகளை, பரஸ்பரம் மதித்தல் என்ற சந்தர்ப்பப் பொருளில் ஏற்றுக்கொள்ளுதல் என்பதே, பேதுரு தமது வாசகர்கள் பின்பற்ற வேண்டிய வழியென்று வற்புறுத்தும் விஷயமாக உள்ளது.

## சாந்தமும் அமைதலுமுள்ள ஆவியாக உள்ளான அழகு (3:1-4)

முதலில் பேதுரு 3:1-6ல் பெண்களிடம் பேசினார், மற்றும் பின்பு 3:7ல்

அவர் ஆண்களிடம் பேசினார். அளவில் சமானமின்மை என்பது தெளிவாகத் தெரிகிறது, ஆனால் சமானமின்மையால் சாதகமான விளைவுகளைப் பெற்றது யார் என்பதைத் தீர்மானித்தல் அவ்வளவு சுலபமானதல்ல. தேவனுடைய கட்டளைகள் கண்டிப்பானதும் சுமையானதுமானவை என்று நாம் கருதச் சாய்ந்தால், பேதுருவின் குறிப்புகள் ஆண்களுக்குச் சாதமானவையாக உள்ளன என்று தப்பெண்ணம் கொள்வதையே நாம் அனேகமாக முடிவுசெய்வோம். இன்னொரு புறத்தில் நாம், வேதவாக்கியங்கள் யாருக்கு உரைக்கப்பட்டனவோ அவர்களின் பிரயோஜனத்திற்காகப் பரிசுத்த ஆவியானவரால் அளிக்கப்பட்ட தெய்வீக ஆலோசனை என்று நாம் ஒப்புக்கொண்டால், பேதுரு பெண்களுக்கு ஆதரவாகப் பேசினார் என்று நாம் முடிவு செய்யலாம். பெண்களுக்கான அவரது அறிவுறுத்துதல் நான்கு தலைப்புகளைக் குறிப்பதாகத் தொகுத்துரைக்கப்படலாம்.

**கீழ்ப்படிதல்**

பேதுரு, "அந்தப்படி மனைவிகளே உங்கள் சொந்தப் புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்திருங்கள்" என்று தொடங்கினார் (3:1). முன்னதாகப் பேதுரு, இந்தக் கிறிஸ்தவர்கள் மனித அதிகாரத்திற்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார் (2:13), மற்றும் ஊழியக்காரர்கள் தங்கள் எஜமானர்களுக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்றும் அவர் வேண்டிக் கேட்டுக்கொண்டிருந்தார் (2:18). "அந்தப்படி" என்ற சொற்றொடர், முந்திய வசனங்களுக்கும் மனைவியர்களுக்கான இந்தப் புத்திமதிக்கும் இடையில் உள்ள சிந்தனை வளர்வை நோக்கி நமது கவனத்தை ஈர்க்கிறது. கீழ்ப்படிதல் என்பது வாழ்வின் பாகமாக உள்ளது. எந்த ஒரு செயலாவது ஒன்றுக்கு மேற்பட்ட நபர்களின் முயற்சிகளை ஈடுபடுத்துகிறது என்றால், அதற்கு யாரேனும் ஒருவர் பொறுப்பாளியாக இருக்க வேண்டும். அதிகாரத்தில் உள்ளவர் மிகச்சிறந்த மனிதராக இருக்கலாம் அல்லது அவ்வாறு இல்லாதிருக்கலாம், ஆனால் இயக்கமின்றிச் செயல்படுவதைக் காட்டிலும் இரண்டாவது அல்லது மூன்றாவது மிகச்சிறந்த நபர் பொறுப்பில் இருத்தல் என்பது மிகவும் சிறந்ததாக உள்ளது.

கீழ்ப்படிதல் இல்லாத நிலையில், அதிகாரம் நிலவாது. பேதுருவின் வார்த்தைகள், மனைவி கீழ்ப்படிதலுடன் இருப்பதா இல்லையா என்பதைத் தேர்ந்து கொள்ளும் சில வாய்ப்பைக் கொண்டிருந்தார் என்று யூகிக்கிறது. மனைவிக்கு இவ்விதமான விருப்பத் தேர்வு இல்லாத ஒருசில இல்லங்களை நான் அறிந்திருக்கிறேன். அவள், ஒன்று தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும், அல்லது அவரை நீதிமன்றத்தில் நிறுத்த வேண்டும் என்ற நிலை உள்ளது. கீழ்ப்படிதல் என்பதைத் தேர்வுசெய்துகொள்ளும் மனைவியை உடைய கணவர் ஆசீர்வதிக்கப்பட்டவராக இருக்கிறார். "கீழ்ப்படிதலுடன் இருங்கள்" என்று மனைவியரிடத்தில் பேதுரு கூறியபோது, அவர் "உங்கள் குடும்பத்தில் உங்கள் கணவர் தலைவராக இருக்க அனுமதியுங்கள்" என்றே கூறினார். கிறிஸ்தவ ஆணின் மனைவி, அவர் அந்தக் குடும்பத்திற்குத் தலையாக இருக்கக் கூடாது என்று தீர்மானித்தால், அவர் தமது குடும்பத்தின் தலைவராக இருத்தலைச் சிரமமானதாகக் காண்பார்.

அரசாங்கங்களுக்கோ, எஜமானர்களுக்கோ அல்லது கணவர்களுக்கோ, யாருக்குக் கீழ்ப்படிதல் என்றாலும், அது விஷயங்களின் ஒருங்கமைவில்

தரப்பட்ட ஒரு பணிப்பொறுப்பை ஏற்றுக் கொள்ளுதல் என்பதாக உள்ளது. இது, ஒருவரின் தகுதி, புத்திகூர்மை அல்லது திறன் ஆகியவற்றின் மதிப்பிடுதலாக இருப்பதற்குத் தொலைவில் உள்ளது. ஒரு மனைவி தனது கணவருக்குக் கீழ்ப்படிந்திருக்க வேண்டும் என்று பேதுரு கூறினார். கணவர் கிறிஸ்தவராக இருக்கவில்லை என்பது இவ்விடத்தில் யூகமாக இருந்தது. கிறிஸ்தவர்களின் நற்செயல்களும் கீழ்ப்படிதல் உள்ள நடத்தையும், புறஜாதியார் தேவனை மகிமைப்படுத்தக் காரணமாகவும் (2:12) புத்தியீன மனிதர்களின் அறியாமையை அடக்கவும் (2:15) காரணமாக இருக்கும், எனவே மனைவிகளின் கீழ்ப்படிதல் உள்ள நடத்தையானது அவர்கள் தங்கள் கணவர்களைக் கிறிஸ்துவுக்கென்று ஆதாயப்படுத்துவதில் மாபெரும் செல்வாக்கைக் கொண்டிருக்கும். தேவனுடைய அன்பு மற்றும் கிருபை ஆகியவற்றின் செய்திக்கு ஆண்களைக் காட்டிலும் பெண்கள் தங்கள் சிந்தைகளை அதிகமாய்த் திறக்கின்றனர் என்பது, இன்றைய நாட்களில் உள்ளது போன்றே பேதுரு நிருபத்தை முதன்முதலாக வாசித்தவர்களின் நாட்களிலும் உண்மையாக இருந்தது என்பது தெளிவு. பல ஆண்கள் தங்கள் மனைவியர்களின் கீழ்ப்படிதல் உள்ள நடக்கையில் கிறிஸ்தவ வாழ்வின் கனிகளைக் கண்ட காரணத்தினால், பரலோகத்தில் நித்தியத்தை மகிழ்வுடன் அனுபவிப்பார்கள் என்பதில் சந்தேகம் இல்லை.

**தூய்மை**

மனைவியர் தங்கள் கணவர்கள் மீது கொண்டுள்ள செல்வாக்கு 3:1ல் விவரிக்கப்படுகிறது: "பயபக்தியோடு கூடிய உங்கள் கற்புள்ள நடக்கையை அவர்கள் பார்த்து." இந்த மனைவியர்கள் வாழவேண்டியிருந்த வழியைப் பேதுரு விவரித்தார். NIV வேதாகமத்தில், "உங்கள் வாழ்வின் ... தூய்மையை அவர்கள் பார்க்கும்போது" என்றுள்ளது. தூய்மையான வாழ்வு என்பது, அடக்கமின்மை அல்லது தகுதியற்ற நடக்கை என்பதெதுவும் அற்றதாக உள்ளது. ஒருவேளை இது நியாயமற்றதாக இருக்கலாம், ஆனால் ஆண்கள் தாங்கள் விரும்புகிற பெண்களை, நற்தன்மையின் சாத்தியமற்ற தரஅளவைகளுக்கு உயர்த்த விரும்புகின்றனர். அவர்கள் தங்கள் மனைவியர்கள், தாய்மார்கள் மற்றும் சகோதரிகளில் உண்மை நெறியும் தூய்மையும் முழுமையாயிருப்பதைக் காணவிரும்புகின்றனர். நீங்கள் விரும்பினால் இதை ஆண் ஆதிக்கப்போக்கு என்று அழைத்துக் கொள்ளுங்கள், ஆனால் தனது பாசத்தையும் தனது நெருங்கிய தொடர்பையும், தனது வாழ்வைப் பகிர்ந்து கொள்ளும் ஒரே ஆணுக்கென்று ஒதுக்கி வைக்கும் பெண்ணை, ஆண்கள் மதிக்கின்றனர் என்பது உண்மையாக உள்ளது.

சிகாகோ பல்கலைக் கழகத்தில் மானிடவியல் விரிவுரையாளராகப் பணி யாற்றும் ஆலென் புளூம் என்பவர், ஒரு சில ஆண்டுகளுக்கு முன்பு, மிகச்சிறப்பாக விற்பனையான தமது புத்தகத்தில் பின்வரும் ஊடுருவும் விமர்சனத்தை எழுதி யிருந்தார்:

> மிகவும் களைப்படைந்த மற்றும் மிகவும் மதியீனமான பழங்காலத் தாய்மார் களும் தகப்பன்மார்களும் தங்கள் மகள்களுக்கு - "அவர் விரும்புவதை அவருக்கு நீ மிக எளிதில் கொடுத்துவிட்டால் அவர் உன்னை மதிக்கவோ அல்லது திருமணம் செய்துகொள்ளவோமாட்டார்" என்று - போதித்தனர்

என்பது வினோதமானதாக உள்ளது, இது தற்போதைய சூழ்நிலையில் மிகவும் உண்மையாகவும் மிகவும் ஊடுருவும் ஆய்வாகவும் உள்ளது.[1]

இது எப்போதாவது "களைப்பானதாக மற்றும் மதியீனமானதாக" இருந்ததா அல்லவா என்பது கேள்விகேட்கப் படலாம். பெண்கள் தூய்மையான வாழ்வை வாழத்தவறுகிறபோது இழந்து போகின்றனர் என்பதை உணர்ந்தறிதல் ஆர்வத்திற்கு உரியதாக உள்ளது. ஒரு மனைவி தனது வாழ்வின் தூய்மையினால் தனது கணவரின் மதிப்பையும் பாராட்டையும் ஆதாயப்படுத்துவாள்.

**பயபக்தி**

ஒரு மனைவியின் பயபக்தியும்கூட, அவிசுவாசியான ஒரு கணவரை கிறிஸ்துவிடத்திற்கு வழிநடத்தக்கூடும். 1ம் வசனத்தில் உள்ள "பயபக்தி" என்பதற்குரிய கிரேக்க வார்த்தையானது, நேரடியாக "பயம்" என்று அர்த்தப்படுகிறது, ஆனால் இது தேவனுக்கு முன்னால் பயத்தோடும் கீழ்ப்படிதலோடும் நிற்குதலின் கருத்துணர்வில் ஏற்படும் பயமாக உள்ளது. பயபக்தி என்பது ஒரு மனைவி விரும்பினால் காண்பிக்கவும் விரும்பாவிட்டால் காண்பியாதிருக்கவுமான ஒரு பண்பு அல்ல. அவள் இரக்கம், சுறுசுறுப்பு மற்றும் விவேகம் ஆகியவற்றை அவள் ஞாயிற்றுக்கிழமை அணியும் உடைகளுடன் அலமாரியில் தொங்கவிட்டுவிடும்போது பயபக்தியில் அவளுக்குள்ள குறைபாடு ஒரு பிரச்சனையாகிவிடும். ஒரு கிறிஸ்தவ மனைவி தனது தனிப்பட்ட மற்றும் பொது வாழ்வில் செயல்விளக்கப்படுத்துகிற மொழிநடை, இரக்கம், ஜெபம் மற்றும் கிறிஸ்தவ ஈவு என்பவை தேவனுக்குப் பயப்படுதல் என்பதில் தானே பாராட்டுவதாக இருக்கும்.

**உள்ளான அலங்கரிப்பு**

பேதுரு, "மயிரைப் பின்னி, பொன்னாபரணங்களை அணிந்து, உயர்ந்த வஸ்திரங்களை உடுத்திக்கொள்ளுதலாகிய புறம்பான அலங்கரிப்பு உங்களுக்கு அலங்காரமாயிராமல்," என்று எழுதியபோது (3:3), பெண்கள் தங்கள் தலைமுடியை ஒருக்காலும் சீவக்கூடாது என்றோ அல்லது ஆபரணங்களை அணியக்கூடாது என்றோ அவர் பரிந்துரைக்கவில்லை. பெண்கள் தக்கவகையிலான சமானநிலை மற்றும் கருத்துநோக்கு ஆகியவற்றுடன் இருக்க வேண்டும் என்றே அவர் வேண்டிக் கொண்டார். நேர்த்தியாக இருக்கவும் மற்றும் ஈர்க்கும் வகையில் இருத்தல் என்பதும் எதிர்பார்க்கப் படுகிறது, ஆனால் உடை மற்றும் ஆபரணங்களை அணிந்துகொள்ளுதலுக்குச் சாதகமாக இருக்கும் வகையில், "அழியாத அலங்கரிப்பாயிருக்கிற சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி"யைப் புறக்கணித்தல் என்பது ஆவிக்குரிய வகையில் தற்கொலையாக இருக்கும். மனைவியானவள் அலங்கரிப்பின்மூலம் தான் ஏற்படுத்தும், பிறரை ஈர்க்கும் வகையினால் தனது கணவனுக்குப் பெரிய அளவில் பலவற்றைக் கூறுகிறாள். அவளது தோற்றம் வெறும் உடல்ரீதியானதாக மாத்திரம் இருக்கும் என்றால், அவள் தனது கணவரின் இருதயத்தைக் கர்த்தரை நோக்கித் திருப்ப இயலாதவளாக இருக்கச் சாத்தியக்கூறுள்ளது. கிறிஸ்துவைப் போன்றிருக்கும் அவளது பண்பு, அவளது சாந்தமும் அமைதலுமுள்ள ஆவி, பயபக்தி மற்றும் தூய்மை ஆகியவையே நிலைத்திருக்கும் செயல்விளைவைக் கொண்டிருக்கும்.

கிறிஸ்துவுக்குக் கணவர் கீழ்ப்படிதலுக்கான பொறுப்பை, அவரது மனைவியின் தோள்களில் பேதுரு சுமத்தவில்லை என்பதைப் புரிந்து கொள்வதில் நாம் கவனமாக இருக்க வேண்டும். சில ஆண்கள் தங்களுக்குள், தங்கள் மனைவியர் ஏதேனும் வேறுபாட்டை ஏற்படுத்த இயலாத அளவுக்கு, மிகவும் பொல்லாதவர்களாக இருக்கின்றனர், மற்றவர்கள் பாராமுகமாக இருக்கின்றனர். மனைவியர் மீது பேதுரு பொறுப்பைச் சுமத்தவில்லை. உணர்வுடன் முயற்சிக்கும் மற்றும் தேவபக்தி கொண்ட பெண்ணானவள், தனது விசுவாசத்தையும் தனது நம்பிக்கையையும் தனது கணவர் தன்னுடன் பகிர்ந்துகொள்ள வேண்டும் என்று விரும்புவாள் என்றே அவர் கூறினார். அந்த முடிவிற்கு அவர் தமது அறிவுறுத்துதலை அளித்தார்.

பெண்கள் நல்ல விவேகம், பொறுமையான சகிப்புத்தன்மை மற்றும் நற்பண்பு ஆகியவற்றை மிகவும் கூடுதலான அளவிற்குக் கொண்டிருக்க வேண்டும் என்று பேதுரு கூறினார். ஞானமும் ஆதரவான திறனும் உடைய மனைவியின் பகுத்தறிதல், நல்ல நிதானிப்பு மற்றும் நுனுக்கம் ஆகியவற்றைப் பாராட்டுவதில் பேதுரு தனிமையாக இருக்கவில்லை. அலெக்சாண்டர் போப் என்பவர் பின்வருமாறு எழுதினார்:

> கணவர் சாந்தம் அடையும் வரையில் ஒருக்காலும் பதில் அளிக்காதவள், அல்லது அவரை அவள் ஆளுகை செய்தால், ஒருக்காலும் தான் ஆளுகை செய்வதைக் காண்பியாதவள்; ஏற்றுக்கொள்ளுதலினால், கீழ்ப்படிதலினால், ஈர்க்கின்றவள், ஒட்டி நின்று வட்டமிடுபவள், இருப்பினும் அவள் கீழ்ப்படிகிறபோது தனது சந்தோஷ உணர்வை அதிக மாகக் கொண்டுள்ளவள்.

இவரது கருத்துணர்வு ஒருவேளை, பேதுருவின் கருத்துணர்வில் இருந்து அதிக தொலைவுக்கு அகற்றப்படாததாக இருந்தது என்று கூறலாம்.

## கடந்த காலத்தில் இருந்த தேவபக்தியுள்ள பெண்களில் இருந்து உதாரணங்கள் (3:5, 6)

உதாரணத்தின் வல்லமையைப் பேதுரு அறிந்திருந்தார். முன்கோபிகளான எஜமானர்களிடம் இருந்து தவறாக நடத்தப்படுதலைப் பெற்றுக்கொண்ட அடிமைகள், தங்கள் மோசமான சூழ்நிலை பற்றிக் கவலைப்பட்டு முறுமுறுக்கும்படி சோதிக்கப்பட்டிருந்த நிலையில் அவர்களுக்கு அறிவுரை கொடுத்தபோது, அவர் கிறிஸ்துவின் உதாரணத்தை அவர்களுக்குக் காண்பித்தார். கர்த்தர் அநீதியாகப் பாடுபட்டார். கர்த்தருடைய உதாரணம் பேதுருவின் மூலமாக அடிமைகளுக்கு அறிவுறுத்தியது போலவே, பழங்காலத்துப் பரிசுத்த பெண்கள், மனைவியர்களுக்கு அறிவுறுத்தினர். அவர்கள் சாந்தமும் மன அமைதலுமுள்ள ஆவிகளினால் தங்களை அலங்கரித்துக் கொண்டனர், தேவன் மீது தங்கள் நம்பிக்கையை வைத்திருந்தனர், மற்றும் இவ்வாறு அவர்கள் தங்களை அலங்கரித்துக் கொண்டனர் என்று அவர்களைப் பற்றிப் பேதுரு கூறினார். எதிர் மறையாக உரைக்கையில், அவர்கள் ஆபரணங்கள், உடைகள் மற்றும் சிகை அலங்காரம் ஆகியவற்றில் தங்கள் அழகைக் கண்டிருந்ததில்லை எனலாம்.

உண்மையில் வேதாகமம், தேவபக்தியுள்ள பெண்களைப் பற்றிக்

கூறுவதற்கு, ஏராளமான விஷயங்களைக் கொண்டுள்ளது. சாராள், ரெபேக்காள், லேயாள் மற்றும் ராகேல் ஆகியோர், தங்கள் கணவர்களின் நாடோடி வாழ்வைப் பகிர்ந்து கொண்டனர் மற்றும் அவர்களுடன் சேர்ந்து தேவனுடைய வாக்குத்தத்தங்கள் மீது சாய்ந்திருந்தனர். ஒருசிலர், மற்ற மொழி பெயர்ப்புகளில் சந்தர்ப்பப்பொருளின் சிரமங்கள் பல்வேறு வகையில் வாசிக்கும்படி வழிநடத்தியிருந்தாலும், KJV வேதாகமத்தில் எபிரெயர் 11:11ன் உணர்வுக்கருத்துடன் விவாதிப்பார்கள்: "வாக்குத்தத்தம்பண்ணினவர் உண்மையுள்ளவரென்று அவள் தீர்மானம் பண்ணினதினால் விசுவாசத்தின் மூலம் சாராளும் கர்ப்பந்தரிக்கப் பெலனடைந்து, வயதுசென்றவளாயிருந்தும் பிள்ளைபெற்றாள்." சாராளுக்குப் பின்பு ரெபேக்காள், வாக்குத்தத்தம் பண்ணப்பட்ட சந்ததியான யாக்கோபுக்கு ஆதரவாக இருந்தாள். பிற்பாடு யாக்கோபுவின் மனைவிகள், அவர்கள் பிறந்த நாட்டை விட்டுக் கானானுக்குப் பயணம் செய்ய, அந்த முற்பிதா முடிவுசெய்தபோது, தங்கள் தகப்பனுக்கு ஆதரவாயிராமல் தங்கள் கணவருக்கு ஆதரவாயிருந்தனர் (ஆதியாகமம் 31:14-17).

இஸ்ரவேல் மக்கள் எகிப்தை விட்டுப் புறப்பட்டபோது, ஆரோனுடன் மோசேயின் சகோதரியான மிரியாம் என்பவளும் ஒரு நடத்துனளாக இருந்தாள். எரிகோவில் விலைமகளாக இருந்த ராகாப் என்பவள், ஒற்றர்கள் கானானுக்குள் பிரவேசித்தபோது, இஸ்ரவேல் மக்களுக்கு உதவினாள். அவளது பெயர் விசுவாசம் நிறைந்தவர்களின் பெயர் அட்டவணையில் காணப்படுவது மட்டுமின்றி (எபிரெயர் 11:31), கர்த்தருடைய வம்சாவழியிலும் காணப்படுகிறது (மத்தேயு 1:5). நியாயாதிபதிகளில் தெபோராள் மிகவும் தனிச்சிறப்பானவளாக இருந்தாள். நியாயாதிபதிகள் 5ல் அவளது பாடல், பழைய ஏற்பாட்டு இலக்கியத்தில் மிகவும் அழகிய இலக்கியப் படைப்புகளில் ஒன்றாக உள்ளது. ரூத் மற்றும் நகோமி ஆகியோரின் அன்பு மற்றும் அர்ப்பணிப்பு, அபிகாயிலின் விவேகம் மற்றும் ஞானம் (1 சாமுவேல் 25), எஸ்தரின் தைரியம் மற்றும் விசுவாசம் ஆகிய யாவும், பழைய ஏற்பாட்டில் தேவன் தமது மக்களிடம் கொண்டிருந்த தொடர்பில் தங்கள் பாகங்களைக் கொண்டுள்ளன.

விசுவாசம் நிறைந்த மற்றும் அர்ப்பணிப்புள்ள பெண்களின் வரலாறுகள் பழைய ஏற்பாட்டுடன் நின்றுவிடுவதில்லை. மரியாள் மற்றும் எலிசபெத் ஆகியோரில் இருந்து தொற்காள் மற்றும் பிரிஸ்கில்லாள் ஆகியோர் வரையில், தேவபக்தியுள்ள பெண்களின் விசுவாசமும் கிரியைகளும் புதிய ஏற்பாட்டில் தொடர்கின்றன. பேதுரு, "இப்படியே பூர்வத்தில் தேவனிடத்தில் நம்பிக்கையாயிருந்த பரிசுத்த ஸ்திரீகளும் தங்களுடைய புருஷர்களுக்குக் கீழ்ப்படிந்து தங்களை அலங்கரித்தார்கள்" என்று கூறியபோது (3:5) கிறிஸ்தவ மனைவிகளுக்கு முன்னதாக அவர், விசுவாசத்தில் பலம் வாய்ந்த ஒரு படைத் துருப்பையே உயர்த்தினார்.

இந்தப் பரிசுத்த பெண்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிந்திருந்த விஷயம், விசுவாசம்நிறைவு பற்றிய அவர்களின் பதிவேட்டில் ஒரு பாகமாக இருந்தது. கீழ்ப்படிதல் என்பது சுயாதீனமாக அளிக்கப்படும்போது, அது அவமரியாதையாய் இருப்பதில்லை. சாராள் தனது கணவரை மரியாதை நிறைந்த வகையில் அழைக்கும் அளவிற்குச் சென்றாள். கிறிஸ்தவப் பெண்கள் தங்கள் கணவர்களுக்குக் கீழ்ப்படிதல் உள்ளவர்களாக இருக்கும்போது, அவர்கள் சாராள்

போன்ற விசுவாசம் உள்ள பெண்களின் ஆவிக்குரிய மகள்கள் ஆகின்றனர்.

## கரிசனம் மற்றும் மதித்தல் ஆகியவற்றின் புருஷத்தன்மை (3:7)

சரியான வகையில் பயன்படுத்தப்படும்போது, வேதாகம அறிவுறுத்துதலானது, வாசகரின் இருதயத்தை ஆராய்ந்து அவரது வாழ்வை உருப்படுத்தும். ஒருவர், ஒரு விரலால் சுட்டிக்காண்பிக்க, சிறுமைப்படுத்த மற்றும் கண்டனம் பண்ண வேதவசனத்தைப் பயன்படுத்தும்போது, ஏதோ சில விஷயங்கள் பயங்கரமான வகையில் நெறிபிழ்ந்து போயிருக்கின்றன. சமீபத்தில் நான், யாக்கோபு 2 மற்றும் விசுவாசம் கிரியைகள் ஆகியவற்றின் உறவுமுறை ஆகியவற்றை மையங்கொண்ட கலந்துரையாடல் நடைபெற்ற வேதாகம வகுப்பு ஒன்றில் இருந்தேன். வகுப்பில் இருந்த ஒரு உறுப்பினர், தமது உறவினர் ஒருவருக்கு அளித்திருக்கப்பட வேண்டியதாக அவர் நினைத்த உதவியின் வகையை அளிப்பதற்கு சபை தவறிவிட்டதற்காக, அதை [சபையை]க் கடுமையாக விமர்சிப்பதற்குப் பலநிமிடங்களை எடுத்துக்கொண்டார். அந்தச் சூழ்நிலை பற்றிய சில விஷயங்களை நான் அறிய நேர்ந்தது. இரக்கமுள்ள மக்கள் உண்மையில், முயற்சி மற்றும் உதவி ஆகியவற்றைப் பெரிய அளவில் கொடுத்தி ருந்தனர், ஆனால் அவற்றிற்குப் பாராட்டுதலின் வார்த்தை எதுவும் பெறாமல் திட்டுதலையே பெற்றிருந்தனர். (மனிதர்கள் அடங்கிய ஒரு குழுமம் என்ற வகையில் சிலவேளைகளில் நடப்பதுபோல) சபையானது தவறியிருந்தாலும், வேதாகமரீதியான போதனை என்பது விரல்சுட்டிக்காட்டுவதற்கானது அல்ல. நம்மில் ஒவ்வொருவரும், தனக்குத்தானே அதை நடைமுறைப்படுத்த வேண்டும். "யார் என்னைத் தவறச் செய்தது?" என்பதல்ல ஆனால் "எங்கு நான் தவறியிருக்கிறேன்? மற்றும் கர்த்தருடைய ஊழியத்தில் நான் அதிகம் பயன்நிறைந்த ஊழியக்காரனாக இருக்க, இவ்வசனத்தில் உள்ள அறிவுறுத்துதல் எனக்கு எவ்வாறு உதவும்?" என்பதே கேள்வியாக உள்ளது.

3:1-7வசனப்பகுதியை, கணவர்களும் மனைவியர்களும், சுயபரிசோதனையின் ஆவியுடன் வாசிக்க வேண்டியதாக உள்ளது. மனைவியாக இருப்பவர் 3:1-6ஐ வாசித்து, தான் எவ்வாறு அப்போஸ்தலரின் அறிவுறுத்துதலைப் பின்பற்றுவதன் மூலம் தனது வாழ்வை இன்னும் அதிகமாகத் தேவபக்தியுள்ளதாக ஆக்கலாம் என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டியது மனைவியின் பாகமாக உள்ளது. கணவராக இருப்பவர் 3:7ஐ வாசித்து, கணவர்கள் எவ்வாறு இருக்க வேண்டும் என்று அப்போஸ்தலர் கூறுகிறாரோ, அந்த விஷயத் திற்குத் தனது செயல்கள் சீர்பொருத்தமானவைகளாக இருக்கின்றனவா என்று தன்னைத் தானே கேட்டுக்கொள்ள வேண்டியது கணவரின் பாகமாக உள்ளது. அவர் தமது மனைவியைச் சிட்சிக்க முதல் வசனங்களை பயன்படுத்தினாலோ அல்லது அவரது மனைவி, உண்மையில் கணவரே பிரச்சனையாக இருக்கிறார் என்று நிரூபிக்க 7ம் வசனத்தைப் பயன்படுத்தினாலோ, இவ்வசனப்பகுதியானது ஏற்கனவே தவறாகப் பயன்படுத்தப்பட்டதாகிறது. கையாளக் கடினமான மனைவியுடன் அவர் எவ்வாறு ஒரு நல்ல கணவராக இருக்க முடியும்? மற்றும் மனைவியானவள் அப்படிப்பட்ட ஒரு முரட்டுத்தனம் உள்ள மனிதருடன்

வாழவேண்டியிருக்கும்போது, எவ்வாறு ஒரு நல்ல மனைவியாக இருக்க முடியும்? இப்படிப்பட்ட தந்திரங்களைப் பயன்படுத்துதல் என்பது இருவரும் இழந்துபோவதை உறுதிப்படுத்துகிறது.

ஒரு கணவர் தமது மனைவியை எவ்வாறு நடத்த வேண்டும் என்பதற்கு அப்போஸ்தலர் தரும் அறிவுறுத்துதல், மூன்று எண்ணப்போக்குகளில் தொகுத்துரைக்கப் படலாம். கணவரின் கடமைகளுக்குப் பேதுரு ஒரு சிறியபகுதி யையே ஒப்புக்கொடுத்தார் என்பது உண்மையே, ஆனால் அங்கு காணப்படுகிற குணங்களை அளவிடக்கூடிய அமைதியான கணவராக அவர் இருக்கிறார்.

**கரிசனை**

நான், உள்ளூர்ப் புத்தகக் கடையில் புத்தகங்களைத் தேடுவதை மகிழ்வுடன் அனுபவிப்பது உண்டு. சிலவேளைகளில் நான், திருமணம் மற்றும் குடும்ப உறவுகளை ஆராயும் "மனோதத்துவம்" என்ற தலைப்பின் கீழான பிரிவினிடத்தில் செல்லுவேன். அவ்வகையான புத்தகங்கள் எவ்வளவு ஏராள மாக அச்சிடப்பட்டுள்ளன என்பது திகைப்புக்கு உரியதாக உள்ளது. அவை ஒவ்வொன்றும் வெற்றிக்கென்று தனக்கே உரிய சூத்திரத்தைக் கொண்டுள்ளன. பாலுறவு பற்றிய கைப்புத்தகங்கள் டஜன் கணக்கில் வெளியிடப்படுகின்றன மற்றும் அனேகமாக அவை மிகச்சிறப்பாக விற்பனையாகும் புத்தகங்களாக இருக்கலாம். இந்தப் புத்தகங்கள், கருத்தரங்குகள், விழிப்புணர்வு மாநாடுகள் முதலிய எல்லாவற்றுடனும், ஒருசில மக்கள் மாத்திரமே, நிலைத்த, பரஸ்பரம் நிறைவளிக்கும் திருமணத்தைக் கட்டியெழுப்பும் பக்குவமும் நல்ல உணர்வறிவும் கொண்டிருப்பது ஏன்? தோல்வியடைகிற திருமணங்கள் பெரும்பாலானவற்றில் சேர்க்கத் தவறிய குணமாக நான் சந்தேகப்படுவதை உங்களுக்குக் கூற என்னை அனுமதியுங்கள்: அது கரிசனை என்பதாகும்! கரிசனையை வேண்டிக் கொள்ளக்கூடிய சாத்திய மான எல்லா யூகங்களையும் உள்ளடக்கும் சூத்திரம் எதுவும் இல்லை.

சுருக்கமாகக் கூறினால், ஒரு கணவர் தமது மனைவிக்காகக் கொண்டிருக்க வேண்டிய கரிசனை பின்வருமாறு உள்ளது: "அவள் உங்களுக்கு என்ன செய்ய வேண்டும் என்று நீங்கள் நினைக்கிறீர்களோ அவற்றையே நீங்கள் அவளுக்குச் செய்யுங்கள்." ஒரு பிறந்தநாளை நினைவு கூருதல், மலர்களை அனுப்புதல், குப்பையை வெளியே எடுத்துச் சென்று கொட்டுதல், ஒரு முறையிடுதலைக் கவனித்தல், தவறைக் கண்டுகொள்ளாது விடுதல், கடைசியாகத் தோல்வியை ஒப்புக்கொண்ட வேளையில் விட்டுக்கொடுத்து விடுதல், வீட்டு வேலையில் உதவுதல், மற்றும் ஆயிரக்கணக்கான பிற விஷயங்களைச் செய்தல் ஆகியவை கரிசனையாக உள்ளது. கரிசனை என்பது சிலவேளைகளில் அவளது விருப்பத் திற்குக் கீழ்ப்படிதல் என்று கூட அர்த்தப்பட முடியும்.

**மதித்தல்**

ஐரா நார்த் என்பவர், பலத்த இல்லங்களைக் கட்டியெழுப்பும் நடைமுறைகள் மீது பேசியதை நான் பல சந்தர்ப்பங்களில் கேள்விப்பட்டு இருக்கிறேன். அவர் பின்வருவது போன்று சிலவற்றைக் கூறுவார்: "தந்தையர்களே, உங்கள் சிறு பையன்களுக்கும் பெண்களுக்கும் உங்களால் கொடுக்கக் கூடிய மிகவும் விலைமதிப்பற்ற பரிசு என்ன என்று நீங்கள் அறிவீர்களா? அவர்களின் தாயை

நேசியுங்கள், அவளை உங்கள் முழுமனதுடன் நேசியுங்கள்!" அவர் கூறியது சரியானதே என்று நான் நம்புகிறேன். நீங்கள் நேசிக்கும் ஒருவர் மற்றும் உடல்ரீதியாக மாத்திரம் விரும்பும் ஒருவர் ஆகியோருக்கிடையில் ஒரு விஷயம் வித்தியாசப்பட முடியும்: நீங்கள் நேசிக்கும் ஒருவரை நீங்கள் மதிக்கவும் செய்வீர்கள். மனைவியை நேசித்தல் என்பது அவளது கருத்துக்களை மதித்தல் மற்றும் அவளிடத்தில் ஆலோசனையை நாடுதல் என்பதாக உள்ளது. அது அவளது பணிக்காக அவளைப் பாராட்டுதல் மற்றும் அவள் நல்லவளாக, நேர்த்தியானவளாக மற்றும் இரக்கமுள்ள மனிதப்பிறவியாக இருக்கிறாள் என்ற கூறப்படுதல் அவசியமாகும்போது ஆதரவளித்தல் என்பதாக உள்ளது. மனைவியை நேசித்தல் என்பது நிதிநிலைத் திட்டங்களை அவளுடன் இணைந்து செய்தலாக, நீங்கள் நேரப்பட வேலை செய்ய வேண்டியிருக்கும்போது அதை அவள் அறிய அனுமதிப்பதாக மற்றும் உங்கள் தனிப்பட்ட பிரச்சனைகளை அந்தரங்கமாக அவளிடத்தில் பேசுதல் என்பதாக உள்ளது. மதிப்பளித்தல் என்பது சிந்தனை நிறைவுடனும் இரக்கத்துடனும் இருப்பதாக உள்ளது.

**பங்காளித்துவம்**

கணவர் தமது மனைவியை ஒரு கூட்டாளி ("பாண்டம்," வசனம் 7) போலவும், "நித்திய ஜீவனாகிய கிருபையை" பெறுவதில் தமது உடன் சுதந்தரரைப் போலவும் நடத்த வேண்டும். நான் தவறாகக் கூறாதவரையில், இந்த சந்தர்ப்பப் பொருளில் "கூட்டாளி" (NIV) என்ற வார்த்தையானது நட்புறவின் கருத்தை உள்ளடக்குகிறது. கூட்டாளிகள் நண்பர்களாக இருக்கின்றனர். கூட்டாளிகள் பொறுப்புகளைப் பகிர்ந்து கொண்டு ஒருவர் மற்றவரை ஆதரிக்கின்றனர் என்பது உண்மையாக உள்ளது. அவர்களின் வளமும் அவர்களின் கடின மான வேளைகளும் ஒன்றாக வந்து போகின்றன என்பது உண்மையாக உள்ளது. இருப்பினும் நீடித்து நிலைத்திருக்கும் ஒரு நட்புறவு, ஒரு நெருக்க மான மற்றும் நீடித்த நட்புறவைக் கட்டியெழுப்பும் வழியைக் காட்டிலும் நீடித் திருக்கும் நட்புறவைப் பற்றிய அதிகதெளிவான விஷயம் வேறு எதுவும் இல்லை. கணவர்கள் தங்கள் மனைவிகளை கூட்டாளிகளாக நடத்த வேண்டும்.

பலத்த மற்றும் நிலையான திருமணங்களையும் இல்லங்களையும் கட்டியெழுப்பும்படி பேதுரு நமக்குக் கொடுக்கும் ஆலோசனையில் அவர் ஒருமுறைகூட "பாலுறவு" என்ற வார்த்தையைக் குறிப்பிடாது இருப்பது மிகவும் வியப்பிற்குரியதாக உள்ளது. கணவர் மற்றும் மனைவிக்கு இடையில் பாலுறவு முக்கியமானதாக உள்ளது, ஆனால் பேதுரு அதை, கிறிஸ்தவக் கணவர்கள் மற்றும் மனைவிகள் ஆகியோருக்குத் தாம் உரைத்த மிகவும் முக்கியமான புத்திமதிகளுக்கு அவ்வளவாக முக்கியத்துவம் அற்றதாகக் கண்டார் என்பது உறுதி.

## முடிவுரை

அமெரிக்க சமூகத்தில் ஒவ்வொருவரும் தத்தமது சொந்த விருப்பங்களை நிறைவேற்றப் பேராசையுடன் [கிடைப்பதை] பற்றிக்கொள்ளுகையில், அது [அமெரிக்க சமூகம்] நொறுங்கிப் போய்விடாதிருக்க வேண்டுமென்றால், தேவனு டைய மக்கள் வழிகாட்ட வேண்டும். கரிசனை மற்றும் மதிப்பு ஆகியவற்றின் மீது அஸ்திபாரம் போடப்பட்ட பாதுகாப்பான இல்லங்களைக் கட்டி எழுப்புதலே,

நிலையான மற்றும் தொடர்வளர்ச்சி உள்ள சமூகத்தின் தொடக்க முனையாக உள்ளது. சமீபத்திய ஆண்டுகளில் நாம், குடும்பத்தை ஆதரித்தல் பற்றிய அதிகமான பேச்சைக் கேள்விப்பட்டு இருக்கிறோம், இருப்பினும் ஒரு தெளிவுள்ள சமூகம் சகித்துக் கொள்ளக் கூடியதைக் காட்டிலும் அதிகமாக அதைப் பலவீனப் படுத்தத் திட்டமிட்ட முயற்சியை நாம் கண்டிருக்கிறோம். உண்மையில் விவாகரத்து விகிதம் குறையவில்லை, இரு பெற்றோரில் ஒருவரை மாத்திரமே கொண்டு வாழும் பிள்ளைகளின் எண்ணிக்கை குறைவடையவில்லை, மற்றும் திருமண உறவுகள் குறித்த ஆலோசனை மையங்கள், தங்களுக்கு வாடிக்கையாளர்கள் இல்லையென்று குறைப்படுவதில்லை. இருபதாம் நூற்றாண்டில், இல்லமானது பயங்கரமான அழுத்தத்தின்கீழ் உள்ளது. அதன் பாதுகாப்பு மற்றும் நெருக்கத்தன்மை ஆகியவை இன்பத்தை நுகரும் தனிநபர்த்துவத்திற்காக பாதுகாக்கப்பட்டு இருக்கும்போது, நாளையதினம் எதைக்கொண்டுவரும் என்று ஒருவர் வியப்படைய மாத்திரமே முடியும். கிறிஸ்தவர்கள் பின்பற்றும்படி பேதுரு வேண்டிக்கொள்ளும் விஷயங்கள், ஒருவருக்கு ஒருவர் உதவியாயிருக்கும் அடிப்படைக் கொள்கைகளாக உள்ளன.

---

குறிப்பு

[1]Allan Bloom, *The Closing of the American Mind* (New York: Simon and Schuster, 1987), 132.